RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 216 | ஆகஸ்டு.11 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முதலிடம்: பேரவையில் தனித் தீர்மானம் கொண்டுவந்த முதல்வர் விஜய் பேசியது என்ன?

சென்னை: ஆக.11-

அரசு நிறுவனங்கள், கல்வி மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண்டும் என சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் தனித் தீர்மானம் கொண்டு வந்தார்.

சட்டப்பேரவையில் பேசிய முதல்வர் விஜய், "மொழி எப்போதும் தொடர்புக்கான ஒன்றே. அதை யாரும் மறுக்க முடியாது. உலகில் உள்ள எல்லா மொழிக்கும் இது பொருந்தும், அதையும் மறுக்க முடியாது. ஆனால் தமிழ் வெறும் மொழி மட்டுமல்ல. பேசினால் வரும் ஓசை மட்டுமல்ல. தமிழ் நமது உயிர். நமது உணர்வு.

நம்மை பெற்ற தாயை அம்மா என்று சொல்லும்போது பாசம், சொந்தமும் நம்மை அறியாமலே நமக்குள் உயிராக, உணர்வாக தோன்றுவதுபோல, தமிழும் எப்படி இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. தாய் எப்படி மிகப்பெரிய புனிதமோ அதுபோல தான் தாய் மொழியும்.

நம் தாய் நமக்கு மிகப் பெரிய புனிதம் என்றால் நம் எல்லாருக்குமான தமிழ்த்தாய் பற்றி சொல்லவா வேண்டும். தாயை போற்றுகிற வாழ்த்துகிற தமிழ்த்தாய் வாழ்த்தை எப்படி விட முடியும், விடவும் மாட்டோம். நமது தமிழ்த்தாய் வாழ்த்து 1891ல் எழுதிய மனோன்மணியம் சுந்தரனார் நம் தமிழ் மொழியை தமிழ்த்தாய் என்று உயர்வாக பாடினார்.

இந்திய துணை கண்டதை இந்திய ஒன்றியதை அழகிய முகமாக கூறிய மனோன்மணியம் சுந்தரனார், அந்த முகத்தோட நெற்றியில் வைக்கிற திலகம் தான் தமிழ்நாடு என்றார். இந்தியாவின் நெற்றியில் இருக்குற போட்டு மாதிரி, ஒரு வெற்றி பொட்டு தான் தமிழ்நாடு. அதன் நறுமணம் உலகம் முழுவதும் பரவுவதுபோல, தமிழின் புகழும் உலகம் முழுக்க பரவ வேண்டும் என்றார்.

இன்று உலகில் தமிழ் பேசும் மக்கள் இல்லாத நாடுகளே குறைவுதான். தமிழும், தமிழனும் இல்லாத நாடு இல்லை. தமிழ் ஒரு மொழி மட்டுமல்ல அது ஒரு பண்பாடு. அது ஒரு சிந்தனை, அது ஒரு அன்பு. தமிழ் என்றால் விருந்தொம்பல். சுருக்கமாக சொன்னால், தமிழ் என்றால் கெத்து. தமிழ் என்றால் பவர்.

அந்த தமிழோட புகழை கூறும் தமிழ்த்தாய் வாழ்த்தில் அனைத்துலகும் இன்பமுற



என்று சொல்லி உலகத்தையே நம் தமிழ் உயர்த்தி பிடிக்கிறது. தமிழ்த்தாய் வாழ்த்து எந்த மொழி, மதம், இனத்தையும், எந்த தனி மனிதனையும் தாழ்த்தி பேசவில்லை. கொஞ் சமும் காயப்படுத்தவில்லை.

நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பெயர் இருக்கும். ஒரு கூட்டத்தில் தமிழ் என்று அழைத்தாம் நாம் ஒட்டுமொத்தமாக திரும்பிப் பார்ப்போம். தமிழ் என்ற சொல்லே, பெயரே மிகப்பெரிய வரலாறு. ஒரு கட்சிக்கு பிரச்சினை என்றால், சம்மந்தப்பட்ட அந்தக் கட்சி மட்டுமே போராடும். ஆனால், தமிழுக்கு பிரச்சினை என்றால் ஒட்டுமொத்த தமிழ்நாடும் முன்னே வந்து நிற்கும்.

உலகில் தோன்றிய பல மொழிகள் காலப்போக்கில் அழிந்துவிட்டன. ஆனால், தமிழ் காலம் காலமாக நிலைத்து, நீடித்து நிற்கிறது. தமிழில் பல்லாயிரம் ஆண்டுகளாக இலக்கணம், இலக்கியம் எல்லாம் உள்ளது நம் பெருமையை சொல்வதற்கு. இத்தனை பெருமையை கொண்ட தமிழ் மொழியின் அடையாளம் தான் தமிழ்த்தாய் வாழ்த்து. ஒட்டுமொத்த இந்தியாவின் பன்முகத்தன்மையை உயர்த்திப்பேசும் தமிழ்த்தாய் வாழ்த்து, நம் தமிழ்நாட்டில் முதல் இடத்தில் இருக்க வேண்டும்.

நம் அரசியல் சாசனமே ஒவ்வொரு மாநிலத்தின் மொழிக்கும், பண்பாட்டுக்கும், பாரம்பரியத்துக்கும் உரிமையை கொடுத்துள்ளது. அந்த உரிமையின் அடிப்படையில் தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். அதுதான் மாநில உரிமை.

தமிழ்த்தாய் வாழ்த்தை 1970 நவம்பர் 23 முதல் அரசு விழாக்களில் முதலில் பாட வேண்டும் என அரசாணை வெளியிட்டு நடைமுறைக்கு வந்தது. அதன்பின்னர் 2021 டிசம்பர் 17 முதல் மாநில பாடலாக அங்கீகாரம் வழங்கப்பட்டது. அனைத்து தொழில், பொது நிறுவனங்களின் விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்பட வேண்டும் என அரசாணை உள்ளது.

2026 ஜனவரி 28ம் தேதி ஒன்றிய அரசு, அரசு விழாக்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து சில அறிவிப்புகளை வெளியிட்டது. அதில் மாநில பாடல் குறித்து எந்த வழிமுறையும் இல்லாது இருந்தது. இதனால் கடந்த ஜூலை 9ல் தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாடப்பட வேண்டும் என பிரதமருக்கு கடிதம் எழுதினேன்.

தமிழ்த்தாய் வாழ்த்தின் பெருமையை காப்பதில் நம் அரசு எந்த சமரசமும் செய்யாது. தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாடுவது அரசியலமைப்புக்கு, இந்திய ஒற்றுமைக்கு எதிரானது அல்ல. மாறாக வேற்றுமையில் ஒற்றுமை என்ற இந்தியாவின் உயர்ந்த கொள்கையை வெளிப்படுத்துவது ஆகும். தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாட வேண்டும் என்பது அரசியல் விவாதமாக மாற வேண்டிய அவசியம் இல்லை. இது தமிழர்களின் பொது அடையாளம். இது நம்மை வேறுபடுத்துவது அல்ல, ஒன்றிணைப்பது.

தமிழ்த்தாய் வாழ்த்தின் கண்ணியத்தையும், தமிழின் தொன்மையை, தமிழர் பண்பாட்டின் பெருமையையும் பாதுகாக்கும் இந்த உயரிய பணியில் அனைத்துக் கட்சிகளும் தங்கள் வேறுபாடுகளை மறந்து, அனைத்து பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள், பொதுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் கட்டாயம் பாடப்பட வேண்டும் என்ற இந்த தீர்மானத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்" என்றார்.

தீர்மானத்தை படித்த அவர், இந்த தீர்மானத்துக்கு அனைவரும் ஆதரவளிக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். இந்த தீர்மானத்துக்கு திமுக, அதிமுக, பாமக, காங்கிரஸ், விசிக உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரி வித்தன.



## தீவுத்திடல் முதல் கலங்கரை விளக்கம் வரை 'சிங்கப்பெண் மாரத்தான்': 3,000 பெண்கள் பங்கேற்பு

சென்னை: ஆக.11-

கர்ப்பப்பை வாய் புற்றுநோய் குறித்த விழிப் புணர்வை ஏற்படுத்தவும், பெண்களின் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தலை வலியுறுத்தவும் சென்னை தீவுத்திடலில் நேற்று 'சிங்கப்பெண் மாரத்தான் 2026' நடை பெற்றது.

இதில் சுமார் 3,000 பெண்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் சென்ட்ரல், மாவட்டம் 323க்கு உட்பட்ட இன்னர் வீல் கிளப்கள் மற்றும் சிங்கப்பெண் சிறப்புப் படை இணைந்து மகளிர் மட்டுமே பங்கேற்ற விழிப் புணர்வு ஓட்டத்தை நடத் தின.

நேற்று (9ம் தேதி) காலை 6 மணிக்கு சென்னை தீவுத்திடலில் இருந்து மாரத்தான் தொடங்கியது. அங்கிருந்து மெரினா கடற்கரை வழியாக கலங்கரை விளக்கம் வரை சென்று, மீண்டும் தீவுத்திடலுக்கு திரும்பும் வகையில் 8 கிலோமீட்டர் தூரத்துக்கு ஓட்டம் நடை பெற்றது.

கல்லூரி மாணவிகள், பணிபுரியும் பெண்கள், இல்லத்தரசிகள் மற்றும் சிங்கப்பெண் சிறப்புப் படையைச் சேர்ந்த பெண் போலீஸார் உட்பட சுமார் 3,000 பேர் இதில் பங்கேற்றனர்.

சிங்கப்பெண் சிறப்புப் படையின் தலைவரும், போலீஸ் ஐ.ஜி.யுமான கே.பவானீஸ்வரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாரத்தானை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த ஓட்டத்தின் மூலம் கர்ப்பப்பை வாய் புற்று நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல், தடுப்பூசி மூலம் நோயைத் தடுப்பது உள்ளிட்டவை குறித்து பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது.

நிகழ்ச்சியில் பேசிய ஐ.ஜி. கே.பவானீஸ்வரி, கர்ப்பப்பை வாய் புற்று நோயை தடுப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், பெண்களின் பாதுகாப்பையும் அதிகாரமளித்தலையும் ஒருசேர வலியுறுத்துவதே இந்த மாரத்தானின் முக்கிய நோக்கம் என்று தெரிவித்தார்.

சிங்கப்பெண் சிறப்புப் படையைச் சேர்ந்த பெண் போலீஸார் பொதுமக்களுடன் இணைந்து ஓட்டத்தில் பங்கேற்றதன் மூலம், பெண்களுடன் நேரடியாக தொடர்பு ஏற்படுத்தும் வாய்ப்பும் கிடைத்தது.

பெண்கள் எந்த நேரத்திலும் பாதுகாப்பாக இருக்கவும், அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கவும் சிங்கப்பெண் சிறப்புப் படை உறுதியாக செயல்படும் என்ற நம்பிக்கையையும் இந்த நிகழ்ச்சி ஏற்படுத்தியது.

மேலும், பெண்கள் அவசர காலங்களில் போலீஸாரின் '1091 உதவி எண்ணை' பயன்படுத்தி உதவி பெறலாம் என்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## "தேர்தலில் வென்றால் இபிஎஸ், தோற்றால் மாவட்ட செயலாளர்கள் காரணமா?" : சி.வி.சண்முகம் ஆவேசம்

சென்னை: ஆக.11-

"தேர்தலில் வெற்றி பெற்றால் இபிஎஸ் காரணம், தோற்றால் மாவட்ட செயலாளர்கள் காரணமா? முறையாக கூட்டணி அமைக்காதது; பிரிந்தவர்களை ஒன்றிணைக்காததுதான் அதிமுக தொல்விக்கு மிகப் பெரிய காரணம். சென்னையில் அதிமுக துடைத்தெறியப்பட்டுவிட்டது" என முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் ஆவேசமாக தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "தேர்தலில் வெற்றி பெற்றால் இபிஎஸ் காரணம், தோற்றால் மாவட்ட செயலாளர்கள் காரணமா? வலுவான தலைவர் வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமியை தேர்வு செய்தோம். சென்னையில் அதிமுக துடைத்தெறியப்பட்டுவிட்டது. பழனிசாமி பொறுப்பேற்ற பின் ஒரு தேர்தலில் கூட அதிமுக வெற்றி பெறவில்லை. சட்டமன்ற, நாடாளுமன்ற, உள்ளாட்சித் தேர்தல் என எதிலும் அவரால் வெல்ல முடியவில்லை.



தமிழகத்தில் தென் மாவட்டம், டெல்டா, சென்னையில் அதிமுக தோல்வியை சந்தித்துள்ளது. ஆனால் விழுப்புரம் போன்ற வட மாவட்டத்தில் பாமகவால் அதிமுக வெற்றி பெற்றது. நாங்கள் தோல்விக்கான காரணத்தை ஆராய வேண்டும் என்று இபிஎஸ்ஸிடம் கேட்கிறோம்.

தோல்விக்குப் பொறுப்பேற்று பல தலைவர்கள் தங்களது பொறுப்புகளை ராஜினாமா செய்துள்ளார்கள். காங்கிரஸ் தோல்விக்கு பொறுப்பேற்று ராகுல் காந்தி ராஜினாமா செய்தார். இபிஎஸ்தான் இன்றும் பொதுச் செயலாளர். நாங்கள் உங்களை ராஜினாமா செய்ய சொல்லவில்லை. திமுகவோடு கூட்டணி வைக்கவில்லை என்று இபிஎஸ் சொல்ல முடியுமா? நான் சத்தியம் செய்கிறேன். இதுவரை இந்த விஷயம் சம்பந்தமாக அவர் வாய் திறக்கவில்லை.

கூட்டத்தைக் கூட்டுங்கள். தேர்தல் தோல்விக்கான காரணம் என்ன என்று நான் சொல்கிறேன். பழனிசாமியின் சொந்த செல்வாக்கில்தான் 47 தொகுதிகளில் வென்றதாக அக்ரி கிருஷ்ணமூர்த்தி சொல்கிறார். 47 தொகுதிகளில் மட்டுமே அவருக்கு செல்வாக்கு என்றால், மற்ற தொகுதியில் அவருக்கு செல்வாக்கில்லை என்கிறாரா? சொந்த மாவட்டமான சேலத்தின் 7 தொகுதிகளில் ஏன் பழனிசாமிக்கு செல்வாக்கு இல்லை?

சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் 3 தொகுதிகளில் மட்டுமே அதிமுக வெற்றி பெற்றிருக்கிறது. தமிழகத்தில் தென் மாவட்டம் பூஜ்ஜியம், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூரில் அதிமுக முழுமையாக தோல்வி அடைந்துள்ளது. வட மாவட்டங்களில் பாமக ஆதரவால் அதிமுக வெற்றி பெற்றுள்ளது.

திருமாவளவனை முதல்வர் ஆக்க வேண்டும் என்று நான் சொன்னதாக சொல்கிறார்கள். ஆமாம், சொன்னேன். எந்தச் சூழலில் சொன்னேன் என்பதை பார்க்க வேண்டும்.

முறையாக கூட்டணி அமைக்காதது, பிரிந்தவர்களை ஒன்றிணைக்காதது அதிமுக தொல்விக்கு மிகப் பெரிய காரணம். இதை ஆராயாமல், காழ்ப்புணர்ச்சியால் பேசுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்களே, உங்களுக்கு தைரியம், திராணி இருந்தால் எப்போது வேண்டுமானாலும் கூட்டத்தை கூட்டுங்கள். நாங்கள் வருகிறோம். தேர்தல் தோல்வி குறித்து விவாதிக்கலாம்.

யார் அந்த அக்ரி கிருஷ்ணமூர்த்தி? அவருக்கு பேச என்ன தகுதி இருக்கிறது? விவசாயத் துறை அமைச்சராக இருந்தபோது ஜெயலலிதாவால் சிறையில் அடைக்கப்பட்டவர்தான் இவர். அவர் எங்களுக்கு பாடம் எடுக்கிறார். அவருக்கு அந்தத் தகுதி இல்லை" என்றார் சி.வி.சண்முகம்

## "தவெகவின் ஐந்து ஆண்டுகள் விவசாயிகளின் பொற்காலமாக இருக்கும்": ஆதவ் அர்ஜுனா

சென்னை: ஆக.11-

"200 தொகுதியில் வெல்வோம் என சொன்ன திமுக, தனது தேர்தல் அறிக்கையில், விவசாயக் கடன் பற்றி பேசவே இல்லை. அதை முன்னாள் அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர் செல்வமே ஒப்புக் கொண்டார். தவெகவின் ஐந்து ஆண்டுகள் விவசாயிகளின் பொற்காலமாக இருக்கும்" என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரி வித்துள்ளார்.

சட்டப்பேரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசியதாவது: 200 தொகுதிகளிலும் வெல்வோம் என திமுக உறுதியாக சொன்னது. ஆனால், முதல்வர் விஜய் தன்னை ஒரு விவசாயி எனச் சொன்னதை, இங்கே மூன்று முறை திமுகவினர் பதிவு செய்துள்ளனர். அவரின்



முதல் பிரச்சாரம் பரந்தூரில், விவசாயிகளுக்கு தான். அப்போதே, என் வாழ்க்கை விவசாயிகளுக்காக இருக்கும் என்றார்.

எங்களின் வாக்குறுதியில் விவசாயக் கடனை தள்ளுபடி செய்வதாக சொல்லியிருந்தோம். அதை முயற்சியாக எடுத்து, ரூ.5932 கோடியை முதல்வர் விஜய் தள்ளுபடி செய்திருக்கிறார். ஆனால் 200 தொகுதியில் வெல்வோம் என சொன்ன திமுக, தனது தேர்தல் அறிக்கையில், விவசாயக் கடன் பற்றி பேசவே இல்லை. அதை முன்னாள் அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர் செல்வமே ஒப்புக் கொண்டார்.

ஏன் இது குறித்து அவர்கள் பேசவில்லை. விவசாயிகளுக்கு கடன் இருக்குமா, இருக்காதா என திமுகவினருக்கு தெரியாதா? ஒருவேளை திமுக ஆட்சிக்கும் வந்திருந்தாலும், அவர்களுக்கு அந்த எண்ணம் கிடையாது. ஆனால் முதல்வர் விஜய்க்கு இந்த எண்ணம் இருந்தது. சொன்னதை செய்யக்கூடியவர் முதல்வர் விஜய்.

ரேஷன் கடைகளில் வழங்கப்படும் அரிசி தரமற்றதாக இருப்பதாகப் பொதுமக்கள் புகார் தெரி வித்தனர். இதையடுத்து அவர்கள் வைக்கும் குற்றச்சாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும், பொதுமக்களுக்குத் தரமான அரிசியை வழங்கும் நோக்கத்திலும்தான் சன்ன வகை நெல்லுக்கான ஊக்கத்தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

நெல், கரும்புக்கான ஊக்கத்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. 100% இருந்த கரும்பு சாகுபடி 30 சதவீதமாக குறைந்துள்ளது. கரும்பு உற்பத்தி திமுக ஆட்சியில் 70% சரிந்தது. 5 ஆண்டு ஆட்சியையும், 3 மாத ஆட்சியையும் ஒப்பிடுவது சரியா?. இந்த ஐந்து ஆண்டுகள் விவசாயிகளின் பொற்காலமாக இருக்கும். முதல்வர் விஜய் விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்" இவ்வாறு அவர் கூறினார்.




## கன்னியாகுமரி மாவட்ட சைபர்பிரிவு போலீஸார் மூலம் மீட்கப்பட்ட ரூபாய் 46 லட்சம் மதிப்பீட்டில் உள்ள செல்போன்கள் உரியவர்களிடம் இ) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் R. ஸ்டாலின் ஒப்படைத்தார்

கன்னியாகுமரி, ஆக.11-

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களில் செல்போன் தொலைந்து போனதாக பல்வேறு மனுக்கள் பெறப்பட்டது. அந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.R.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

உத்தரவின்படி சைபர் பிரிவு போலீசார் காணாமல் போன செல்போன்களை கண்டுபிடித்து மீட்கும் பணியில் தொடர்ந்து தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். தொடர் நடவடிக்கையால் தற்போது சுமார் 46,00,000 (நாற்பத்தி ஆறு இலட்சம் ரூபாய்) மதிப்புள்ள 260 செல்போன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்படி கண்டுபிடிக்கப்பட்ட செல்போன்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உரிய நபர்களிடம் ஒப்படைத்தார்.

இந்த வருடத்தில் மட்டும் சுமார் ஒரு கோடி மதிப்புள்ள 580 செல்போன்கள் கண்டுபிடிக்கப் பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப் பட்டன.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட ஸ்ரீ மீனாட்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில், தேசிய குடற்புழு நீக்க நாள் தினத்தையொட்டி, குடற்புழு தொற்றிலிருந்து பாதுகாக்கும் வகையில் பள்ளி மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (10.08.2026) அன்று வழங்கி, முகாமினை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மரு. நா. கலுசிவலிங்கம், வட்டார மருத்துவ அலுவலர் மரு. சௌந்தரியா, மருத்துவ அலுவலர் மரு. கவியரசி, மாவட்ட தாய், சேய் நல அலுவலர் பியூலா, மாவட்ட தொற்றுநோய் அலுவலர் மரு.அரவிந்த்ராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## காரணி கிராமம் கற்பகாம்பாள் சமேத இராமலிங்கேஸ்வரர் சுவாமி திருக்கோவில் 48ம் நாள் மண்டலாபிஷேக நிறைவு விழா

மாதவரம், ஆக.11-

திருவள்ளூர் மாவட்டம் பூச்சி அத்திப்பேடு அடுத்த காரணி கிராமம் இன்பன்ட் ஜீசஸ் நகரில் புதியதாக எழுந்தருளிருக்கும் அருள்மிகு கற்பகாம்பாள் சமேத இராமலிங்கேஸ்வரர் சுவாமி திருக்கோவில் 48ம் நாள் மண்டலாபிஷேக நிறைவு விழா திருஞான நிறுவனர் சிவனடியார் சம்மந்தர் தொண்டு அறக்கட்டளையின் ஜெ.வாசுகி அம்மையார் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் யாகசாலையில் கணபதி பூஜையுடன் பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் கைலாய வாத்தியங்கள் முழங்க யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை கொண்டு சென்று மூலவர்கள் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு திருக்குட நன்னீராட்டு செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.



இதனைத்தொடர்ந்து பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர். பின்னர் கற்பகாம்பாள் சமேத இராமலிங்கேஸ்வரர் மற்றும் விநாயகர், முருகர், தட்சணாமூர்த்தி,

லிங்கோத்பார், பிரம்மா, வாராகி, வைஷ்ணவி, துர்கை, அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர். திருஞானசம்மந்தர் ஆகிய பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அலங்காரம் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.பின்னர் கற்பகாம்பாள் சமேத இராமலிங்கேஸ்வர் சுவாமிக்கு திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவிற்கு திருக்கோவில் நிர்வாகிகள், திருஞான சம்மந்தர் தொண்டு அறக்கட்டளையின் சிவனடியார்கள் உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் திருக்கோவில் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று (10.08.2026) பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் மஞ்சுளா, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) முருகேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## மண்ணிவாக்கம் ஊராட்சி ஆதி திராவிடர் நலன் தீண்டாமை கடைபிடிக்காத மற்றும் சமூக நல்லிணக்க விருது பெறப்பட்ட விருது தொகையில் 5 முக்கிய வளர்ச்சிப் பணிகள் பூமி பூஜை நடைபெற்றது

மண்ணிவாக்கம், ஆக.11-

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மண்ணிவாக்கம் ஊராட்சியில், பொதுமக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் சமூக நலனை மேம்படுத்தும் வகையில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் 5 முக்கிய வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆகியோரின் அணைக்கினங்க மண்ணிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கெஜலட்சுமி சண்முகம் தலைமையில் நடைபெற்ற மண்ணிவாக்கம் ஊராட்சியில் பின்வரும் பணிகள்





மேற்கொள்ளப்பட உள்ளனமண்ணிவாக்கம் கே.கே. நகர் தாங்கலில் காத்திருப்பு கூடம் அமைத்தல் - ரூ.10 லட்சம்.மண்ணிவாக்கம் ஊராட்சியில் பொது விநியோகக் கடை அமைத்தல் - ரூ.14 லட்சம்.மண்ணிவாக்கம் ஊராட்சியில் HSC கட்டிடம் கட்டுதல் - ரூ.45.57 லட்சம்.அண்ணா நகர் நிநி பகுதியில் மயானக் கொட்டகை சுற்றுச்சுவர் மற்றும் கைப்பம்பு அமைத்தல் - ரூ.20 லட்சம்.ஆதிதிராவிடர் அரசு மேல்நிலைப் பள்ளி அருகே பேருந்து நிழற்குடை அமைத்தல் ரூ ரூ.10.43 லட்சம்.இந்த வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்பட்டால் மண்ணிவாக்கம் ஊராட்சி பொதுமக்களுக்கு போக்குவரத்து, குடிநீர், பொது விநியோகம், சுகாதாரம் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேலும் மேம்படும் என எதிர்பார்க் கப்படுகிறது. மண்ணிவாக்கம் ஊராட்சியின் வளர்ச்சிக்காக ரூ.1 கோடி மதிப்பிலான பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பது பொது மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளதுஇதில் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.டி.லோகநாதன், துணைத் தலைவர் சுமதி லோகநாதன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மா.வே.பொன்னுசாமி, காட்டாங் கொளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.எஸ். கார்த்திக் மற்றும் வார்டு உறுப்பினர் அமுதா ரங்கநாதன், பூஅழகி நித்திய செல்வராஜ், உஷா பிரபு, பூசாதேவி புன்னியகோட்டி, சுரேஷ், லட்சுமி நாகராஜ், குமார், பத்மா தெய்வசிகாமணி மல்லிகா பார்த்திபன், சேகர், பச்சையம்மாள் அண்ணாதுரை மற்றும் ஊராட்சி செயலாளர் ராமபக்தன் உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்





## உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் பழங்குடியினர் சார்பில் நடைபெற்ற பூர்வீக குடிகளின் விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்தார்

நீலகிரி, ஆக.11-

நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், மாவட்ட நிர்வாகம், வனத்துறை மற்றும் பழங்குடியினர்கள் சார்பில் நடைபெற்ற பூர்வீக குடிகளின் சர்வதேச தின விழாவினைமாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்துபழங்குடியின மக்கள் மற்றும் பழங்குடியின மாணவியர்களின் சார்பில் நடைபெற்ற பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். உடன் மாவட்ட வன அலுவலர் கஷாப் சசாங்ரவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, மாவட்ட சுற்றுலா அலுவலர் சங்கர், அரசு அலுவலர்கள் மற்றும் பல்வேறு பழங்குடியினர் சங்க நிர்வாகிகள் உட்பட்ட பலர் உள்ளனர்.



## கழிவுநீர் நடைபாதை வழியாக சாலையில் தேங்கி நிற்பதால் பெரும் அவதி

நாகர்கோவில், ஆக.11-

கோட்டார் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியிலிருந்து கணேசபுரம் செல்லும் சாலையில், மருத்துவமனையில் இருந்து வெளியேறும் கழிவுநீர் நடைபாதை வழியாக சாலையில் தேங்கி நிற்பதால் அப்பகுதியில் கடுமையான சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களுக்கு தொற்றுநோய் பரவும் அபாயம் உருவாகியுள்ளது மருத்துவமனையின் கழிவுநீர் முறையாக வெளியேற்றப்படாமல் சாலையோர நடைபாதை வழியாக வழிந்தோடி தேங்குவதால் அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுகிறது.

தினமும் காலையிலும் மாலையிலும் இப்பாதையின் வழியாகத்தான் ஏராளமான பள்ளிச் குழந்தைகளும், முதியோர்களும் நடந்து சென்று வருகின்றனர். அவர்கள் அசுத்தமான தண்ணீரை மிதித்துவிட்டே செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

தேங்கியுள்ள கழிவுநீரால் கொசுக்கள் உற்பத்தியாகி டெங்கு போன்ற கொடிய தொற்றுநோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக அப்பகுதிவாசிகள் அச்சம் தெரிவிக்கின்றனர் இந்தச் சாலையின் வழியாக தினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வந்து செல்கின்றனர். எனவே, மாவட்ட நிர்வாகமும், மாநகராட்சி அதிகாரிகளும் உடனடியாகத் தலையிட்டு ஆய்வு நடத்தி, மருத்துவமனை கழிவுநீர் வெளியேறுவதை தடுத்து சாலையைச் சீரமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அதிமுக திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளராக டாக்டர். திருப்பதி நியமனம் : எம்ஜிஆர் சிலைக்கு அம்பேத்கர் சிலைக்கும் மாலை அணிவித்த மாவட்ட செயலாளர் டாக்டர். பசுபதி

திருப்பத்தூர், ஆக.11-

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மாடப்பள்ளி மடவாளம் காக்கனம்பாளையம் ஏனைய 15 கிராமத்திற்கு உட்பட்ட தெற்கு ஒன்றிய செயலாளராக டாக்டர் எல்.திருப்பதி எம்பிபிஎஸ்., நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இதன் காரணமாக ஆகஸ்ட் 9 அன்று மடப்பள்ளி பகுதியில் அமைந்துள்ள எம்ஜிஆர் சிலைக்கும், அம்பேத்கர் சிலைக்கும் மேல தாளங்கள் முழங்க சிலம்பாட்டத்துடன் அதிமுக கொடிகளை ஏந்தி திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் டாக்டர். பசுபதி மாலை அணிவித்து மரியாதை செய்தார் மேலும் நிகழ்ச்சியில் திருப்பத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வம், கந்திலி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.டி.சி.சங்கர், இணை செயலாளர் உஷா நாகராஜன், மாடப்பள்ளி ராணி நடராஜன் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



## காவேரிப்பட்டினத்தில் அகில இந்திய தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்தி தமிழக அரசுக்கு நன்றி

கிருஷ்ணகிரி, ஆக.11-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் தொண்டு நிறுவனங்களில் கூட்டமைப்பின்மாநில நிர்வாகிகளின் கூட்டம் நடைப்பெற்றது,

தேசிய தலைவர் மருத்துவர் அனுராதா சுனில் அம்மையாரின் வழிக்காட்டுதலின் படி நடைப்பெற்ற இக்கூட்டத்திற்குதேசிய ஒருங்கிணைப்பாளர் மாரியப்பன் தலைமையில் நடைப்பெற்ற இந்தக் கூட்டத்தில்தமிழ்நாடு மாநில தலைவர்அப்துல் அமீத், தேசிய செயலாளர் முத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மேலும் இக் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராககிருஷ்ணகிரி



மாவட்ட தலைவர் கோவிந்தராஜ்,மாநில ஒருங்கிணைப்பாளர் திருமதி பத்மினி,மாநில பொருளாளர் கணேசன் மாநில செயலாளர் பாலாஜி,ஆகியோர் கலந்து கொண்டு கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் குறித்து சிறப்புரை ஆற்றினார்இதனைத் தொடர்ந்து பேசிய மாநில தலைவர் அப்துல் அமீத்நமது தொண்டு நிறுவனங்கள் சார்ப்பில் தற்போது தமிழகத்தில் புதிதாக ஆட்சி அமைந்துள்ள தமிழக அரசுக்கு வாழ்த்து தெரிவித்து தொண்டு நிறுவனங்களுக்கு தனியாக நலவாரியம் அமைக்க முனிவரவேண்டும்,மகளிர் திட்டத்தில் ஐந்து ஆண்டுக்கு முன்பாக இருந்தது போன்ற நிலையை மீண்டும் உருவாக்கி தொண்டு நிறுவனங்கள் மூலமாகதான் குழு கடன் வழங்குவது மட்டு மின்றி சுழல் நீதியும் வழங்குவது போன்ற அனைத்து செயல்பாடுகளும் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்திட வேண்டும்குறிப்பாக தற்போது தமிழகத்தில் நல்லதொரு ஆட்சி செய்து வரும் தமிழக அரசு முதல் முறையாக கொண்டு வந்த முதல் பட்ஜெட்டில் தமிழகத்தில் மீண்டும்15 காமராஜ் உண்டு உறைவிட பள்ளிகள் துவங்குவதாக அறிவித்துள்ளதற்கு நன்றி தெரிவித்தார்.அப்போது ஐந்து மண்டல தலைவர்களானமருதாச்சலம்,மாரிமுத்து,உத்தரகுமார் ,சாலமன் ,காசிநாதன், மாவட்ட செயலாளர் முருகம்மாள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரவிசந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்

# ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆடிமாத தீமிதி திருவிழா



மாதவரம், ஆக.11-
மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி காந்திநகர் கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் 49ம் ஆண்டு ஆடிமாத திருவிழா மற்றும் 16ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய தலைவர் ஞானசேகர், செயலாளர் வழக்கறிஞர் சீனிவாசன், பொருலாளர் வழக்கறிஞர் தேவராஜ் ,துணைத்தலைவர்கள் சுகுமாரன், குமார், சுரேஷ்,கோபால் துணை செயலாளர்கள் சிவா, ரமேஷ், அசோக், இணை செயலாளர்கள் முருகேசன், யுவராஜ், கணக்கு தணிக்கையாளர்கள் ரமேஷ், ஞானசேகர், கௌரவத்தலைவர்கள்சக்கரையப்பநாடார்,மாயவன் ,கிருஷ்ணன், ஏழுமலை, கிருஷ்ணன், கௌரவ ஆலோசகர்கள் கோதண்டன், சங்கரலிங்கம், கலைபாபு உள்ளிட்ட ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் கங்கைநீர் எடுத்தல், பால்குடம் எடுத்தல், அம்மனுக்கு காப்புகட்டுதல், பூங்கரகம் எடுத்தல், அலகு பானை எடுத்தல், அக்னி கப்பறை எடுத்தல், கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை, தாய்வீட்டு சீதனம் எடுத்தல், மற்றும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரத்துடன் மஹா தீபாராதனை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.பின்னர் சுமார் 300க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இரங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் உள்ளிட்ட குளிர்பானங்கள் வழங்கப்பட்டது. முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வான வேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது.

# கிருஷ்ணகிரியில் ரூ.2.45 லட்சம் மதிப்பிலான 336 கிலோ குட்கா பறிமுதல்தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை பதுக்கி விற்றதாக ஒருவர் கைது

## தலைமறைவானவருக்கு போலீசார் வலை



கிருஷ்ணகிரி, ஆக.11-
கிருஷ்ணகிரியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் பான் மசாலா உள்ளிட்ட புகையிலைப் பொருட்களை பதுக்கி வைத்து விற்பனை செய்ததாக ஒருவரை போலீசார் கைது செய்தனர். அவரிடமிருந்து ரூ.2.45 லட்சம் மதிப்பிலான 336 கிலோவுக்கும் அதிகமான தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட குட்கா, பான் மசாலா உள்ளிட்ட புகையிலைப் பொருட்களை பதுக்கி வைத்து விற்பனை செய்வதை தடுக்கும் வகையில் போலீசார் தீவிர கண்காணிப்பு மற்றும் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.இந்நிலையில், தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் பான் மசாலா பொருட்கள் பதுக்கி வைத்து விற்பனை செய்யப்படுவதாக கிருஷ்ணகிரி தாலுக்கா போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, தாலுக்கா காவல் ஆய்வாளர் மணிமாறன் தலைமையில், காவல் உதவி ஆய்வாளர் அன்பழகன் மற்றும் போலீசார் சேலம்ரு கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டனர்.அப்போது அந்த வழியாக சந்தேகத்திற்கிடமாக வந்த இருசக்கர வாகனத்தை போலீசார் நிறுத்தி சோதனை செய்தனர். வாகனத்தில் இருந்த நபரிடம் விசாரணை நடத்தியதில், அவர் கிருஷ்ணகிரி சத்தியசாய் நகரைச் சேர்ந்த ஷாகித் அன்வர் (51) என்பது தெரியவந்தது. அவரது வாகனத்தில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் இருப்பதும் சோதனையில் கண்டறியப்பட்டது.இதையடுத்து அவரிடம் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில், அவர் தனது தம்பி ஜாவீத் என்பவருடன் சேர்ந்து பெங்களூருவில் இருந்து தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை வாங்கி வந்து, கிருஷ்ணகிரி கட்டிகானப்பள்ளி செல்லாண்டி நகரில் உள்ள வீட்டில் பதுக்கி வைத்து விற்பனை செய்து வந்ததாக தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து போலீசார் அதிகாரிகள் முன்னிலையில் சம்பந்தப்பட்ட வீட்டில் சோதனை மேற்கொண்டனர். அப்போது ஹான்ஸ், கூல் லிப், விமல் பான் மசாலா உள்ளிட்ட பல்வேறு வகையான தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் மூட்டைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.சோதனையில் மொத்தம் 336.434 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மொத்த சந்தை மதிப்பு சுமார் ரூ.2,45,045 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் நிலையத்தில் குற்ற எண் 314/2026 என வழக்குப்பதிவு செய்யப்பட்டு, தொடர்புடைய சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கைது செய்யப்பட்ட ஷாகித் அன்வர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.இந்த வழக்கில் தொடர்புடையதாக கூறப்படும் மற்றொரு நபரான ஜாவீத் தலைமறைவாக உள்ளதாகவும், அவரை போலீசார் தீவிரமாக தேடி வருவதாகவும் தெரிவித்தனர். பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.பொது மக்களின் உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் குட்கா, பான் மசாலா உள்ளிட்ட தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை பதுக்கி வைத்து விற்பனை செய்வோர் மீது தொடர்ந்து தீவிர நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இதுபோன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என காவல்துறை சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# ஜோலார்பேட்டையில் குரு வட்ட அளவிலான தடகளப் போட்டி

ஜோலார்பேட்டை, ஆக.11-
திருப்பத்தூர் மாவட்டம் பள்ளிக்கல்வித்துறை சார்பாக ஜோலார்பேட்டை குரு வட்ட அளவிலான தடகளப் போட்டிகள் 2026 2027 ஆம் ஆண்டிற்கான அரசு மேல்நிலைப்பள்ளி ஜங்கலாபுரம் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான தடகளப் போட்டிகள் ஜோலார்பேட்டை சிறு விளையாட்டு அரங்கில் வெங்கடாபுரம் ஆத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் செந்தில்குமார் தலைமையில் நடை பெற்றது.இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் கே.சி.வீரமணி, மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் குணசுந்தரி, நகர செயலாளர் சீனிவாசன், ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி விளையாட்டு கொடி ஏற்றி தடகளப் போட்டியை துவக்கி வைத்தார்கள். வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கி சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் தடகளப் போட்டியில் பங்கு பெறும் மாணவ மாணவிகள் விளையாட்டு ஆசிரியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





# குரோம்பேட்டை கக்களஞ்சாவடியில் ஸ்ரீ சக்தி விநாயகர் கங்கையம்மன் ஆலய ஆடி திருவிழா முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

குரோம்பேட்டை, ஆக.11-
செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை கக்களஞ் சாவடியில் உள்ள ஸ்ரீ சக்தி விநாயகர் கங்கையம்மன் திருவிழாவை முன்னிட்டு தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகி ரக்ஷிதா சங்கர் கணேஷ் ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது நடைபெற்ற நிகழ்ச்சியில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் மற்றும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான காமாட்சி ஜெயகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து பின்னர் அன்னதானத்தை துவக்கி வைத்து சிறப்பித்தார், உடன் தமிழக வெற்றி கழகத்தின் செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் , மாவட்ட நிர்வாகிகள் பகுதி நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பழனியில் குற்றங்களை தடுக்க கடும் நடவடிக்கை: "நண்பனாக அணுகலாம்"

## புதிய டி.எஸ்.பி. தேவராஜ் அதிரடி உறுதி!

திண்டுக்கல், ஆக.11-
திண்டுக்கல் மாவட்டம் பழனி உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளராக (ஞிஷிறி) தேவராஜ் புதிய பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து பழனி பகுதி பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு குறித்த முக்கிய அறிவிப்புகளையும், எச்சரிக்கைகளையும் அவர் விடுத்துள்ளார்.




பழனி உட்கோட்டப் பகுதிகளில் மக்களின் பாதுகாப்பிற்கு முழு முதன்மைத்துவம் வழங்கப்படும். தேவையற்ற குற்றச் சம்பவங்களில் ஈடுபடும் நபர்கள் மீது சட்டம் தன் கடமையை மிகக் கடுமையாகச் செய்யும். குற்றப் பின்னணி கொண்ட நபர்கள் மற்றும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது காவல்துறையின் தனிப் பார்வை இருக்கும்.மாணவ, மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், பள்ளி மற்றும் கல்லூரி வளாகப் பகுதிகளில் தேவையற்ற நபர்கள் நடமாடுவதும், அத்துமீறல்களில் ஈடுபடுவதும் முற்றிலும் தடை செய்யப்படும். இதனை மீறுபவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களைத் தவறான போதை பழக்கவழக்கங்களுக்குள் தள்ளும் சமூக விரோதிகள் எவராயினும் அவர்கள் மீது கடுமையான சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்படுவார்கள். பொதுமக்களின் அமைதியான வாழ்விற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அதிவேகமாக இருசக்கர வாகனங்களை ஓட்டுபவர்கள் மற்றும் 'பைக் ரேஸ்' போன்ற ஆபத்தான செயல்களில் ஈடுபடுபவர்களுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. மீறினால் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுவதோடு சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், பொதுமக்களின் பாதுகாப்பிற்காக இரவு நேர காவல் ரோந்துப் பணிகள் (Night Patrolling) இனி வரும் நாட்களில் தீவிரப்படுத்தப்படும்.பழனி பகுதியில் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்ட பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாகும். பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் நடக்கும் சட்டவிரோத செயல்கள் அல்லது தங்களுக்கு ஏற்படும் இடையூறுகள் குறித்து எந்த நேரத்திலும் என்னை நேரடியாகத் தொடர்பு கொண்டு புகார்களைத் தெரிவிக்கலாம்.


காவல் அதிகாரி என்ற பயம் இல்லாமல், "உங்களில் ஒருவன், உங்கள் நண்பன்" என்ற நம்பிக்கையோடு பொதுமக்கள் என்னை அணுகலாம் எனத் தெரிவித்துள்ளார் 099524 13356

# ஸ்ரீ வடக்கு நாகமுத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆடிமாத திருவிழா



மாதவரம், ஆக.11-
மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமம் கே.கே.நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ வடக்கு நாகமுத்துமாரியம்மன் ஆலயத்தில் 37ம் ஆண்டு ஆடிமாத திருவிழா ஆலய தலைவர் முனியாண்டி , செயலாளர் மகாலிங்கம் , பொருளாளர் சுரேஷ்குமார், துணைத்தலைவர் மணிகண்டன், துணை செயலாளர் சரவணன், கௌரவத்தலைவர் கன்னியப்பன், கௌரவ ஆலோசகர்கள் சுரேஷ்குமார், பாபு, ஜெகதீசன், மற்றும் நிர்வாகிகள் பாலசுப்பிரமணியன், மூர்த்தி, முனுசாமி, சிவரஞ்சன், விக்கி, நித்தீஷ்குமார், துரை, உதயசந்திரன், ஜெயபிரகாசம், சரவணன், நடேசன் உட்பட மகளிர்கள் ரஞ்சிதம், பாண்டியம்மாள், லட்சுமி, காவேரி, சாந்தி, நிர்மலா, கௌசல்யா, லதா, சரண்யா, ஏசோதா, நித்தியம்மாள், ஆலய அர்ச்சகர் நாராயணன் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.நிகழ்ச்சியில் கணபதி ஹோமம், கோபூஜை, பால்குடம் எடுத்தல், அம்மனுக்கு காப்புகட்டுதல், பூங்கரகம் எடுத்தல், அக்னி கப்பறை எடுத்தல், கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை, மற்றும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரத்துடன் மஹா தீபாராதனை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இத்திருவிழாவிற்கு ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது. முடிவில் மஞ்சள் நீராட்டு, சுமங்கலி பூஜை நடைபெற்றது.

# இந்துக்கள் மயானத்தில் லாரிகளில் மூலம் கொட்டப்படும் மண்களை தடுக்கவும், கொட்டிய மண்களை அகற்றவும் நீலகிரி மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ளுமா?



நீலகிரி, ஆக.11-
குன்னூர் தாலுகாவிற்கு உட்பட்ட குன்னூர் உதகை சாலையில் வெலிங்டன் பிருந்தாவன் பகுதியில் அருகே இந்துக்கள் மயானம் பல ஆண்டுகளாக உள்ள நிலையில்,வெலிங்டன் கண்டோண்மென்ட் பகுதிக்கு உட்பட்ட கிராமங்களான ஜெயந்திநகர், அண்ணாநகர், அம்பேத்கர், உட்பட இந்த பகுதியில் வசிக்கும் பொது மக்கள் யாராவது இறந்தால் அவர்களின்உடல் இந்த மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.இந்த நிலையில் வேறு இடத்தில் இருந்து லாரிகள் மூலம் எடுத்து வரப்படும் மண்கள் இந்த மயானத்தில் கொட்டப் படுகின்றன.இந்த மயனாத்தில் கொட்டப்படும் மண்களால் இறந்தவர்களின் உடல்கள் இறுதி சடங்கு செய்வதற்கு இந்த இடத்தில் அமைந்துள்ள அரிச்சந்திரன் கடவுள் கல் காணவில்லை. மேலும் இறந்தவர்களின் உடல் எடுத்து செல்ல நடைபாதை இன்றியும் அடக்கம் செய்வதிலும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. தொடந்து மயான பகுதியில் மண்களை கொட்டினால் மயானம் இல்லாமல் மறைந்து விடும் சூழ்நிலைக்குவாய்ப்புண்டு. எனவே இந்து மயானத்தை பாதுகாக்கவும் இந்த பகுதியில் லாரிகள் மூலம் கொண்டு வரப்பட்டு இந்து மயானத்தில் கொட்டப்படும் மண்களை இந்த பகுதியில் கொட்டப்படாமல் இந்துக்களின் மயானத்தை பாதுகாக்க நீலகிரி மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ளுமா?பொது மக்கள் கேள்வி!

**அறிவிப்பு**

**மூல பத்திரம் காணவில்லை**

**உடுமலைப்பேட்டை சார்பதிவக ஆவண எண் 4983/2018 உடுமலை வட்டம், திருப்பூர் மாவட்டம் சார் பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 18.07.2026 தேதி அன்று பத்திரப்பதிவு நிகழ்வு அன்று முதல் பக்கத்தை தவிர மற்றைய ஏனைய பதிவு பக்கங்கள் காணவில்லை. இதனைக் குறித்து Online மூலமாக 04.08.2026 அன்று OLC9372600044374 தெரிவிக்கப்பட்டுள்ளது. எவரேனும் இதனை பற்றி அறிந்தால் கீழ்கண்ட தொலைபேசி எண் 8825629584 தெரிவிக்கவும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.**



## சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை விழிப்புணர்வு நிகழ்ச்சி

சிவகங்கை,ஆக.11-
சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் பகுதியில் உள்ள செயின்ட் மைக்கேல்ஸ் தனியார் பள்ளி மற்றும் கல்லூரியைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.நிகழ்ச்சியில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு உதவி எண் 1091, அவசரகால உதவி எண்கள் 100 மற்றும் 112, சைபர் குற்ற உதவி எண் 1930 மற்றும் காவல் உதவி செயலியின் பயன்பாடுகள் குறித்து விளக்கப்பட்டது.மேலும், சமூக வலைதளக் குற்றங்களிலிருந்து தற்காத்துக் கொள்ளும் வழிமுறைகள், தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பாகக் கையாளுதல் மற்றும் இணையவழி மோசடிகளில் சிக்காமல் இருப்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. சிவகங்கை மாவட்ட சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை உதவி ஆய்வாளர் அமுதா, பெண் தலைமை காவலர்கள் நாகசௌந்தரி மற்றும் தேன்மொழி ஆகியோர் கலந்துகொண்டு, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு, குழந்தைகளின் கல்வியின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தனர்.



## சிவகங்கையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: 497 மனுக்கள் பெறப்பட்டன



சிவகங்கை ஆக.11-
சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று (10.08.2026) நடைபெற்றது.

கூட்டத்தில் பங்கேற்ற மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்ற மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ், அவர்களின் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இலவச வீட்டுமனைப் பட்டா, சமூகப் பாதுகாப்புத் திட்ட உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உதவித்தொகை மற்றும் உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து மொத்தம் 497 மனுக்கள் பெறப்பட்டன.

தகுதியான மனுக்கள் மீது தனிக் கவனம் செலுத்தி விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் எஸ்.செல்வசுரபி, தனித்துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அனீஷ் சத்தார் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



■ திருப்பூரில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (10.08.2026) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் க. கார்த்திகேயன், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்: ஆக.31 வரை முன்பதிவு

### சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் அழைப்பு

சிவகங்கை ஆக.11-
சிவகங்கை மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பை-2026 விளையாட்டுப் போட்டிகள் செப்டம்பர் 4ஆம் தேதி தொடங்குகின்றன. போட்டிகளில் பங்கேற்க விரும்புவோர் உரிய ஆவணங்களுடன் tncmtrophy.sdat.in என்ற இணையதளத்தில் ஆகஸ்ட் 31ஆம் தேதிக்குள் முன்பதிவு செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் நடைபெறும் இப்போட்டிகளில், கடந்த ஆண்டு இடம்பெற்ற 38 விளையாட்டுகளுடன் வில்வித்தை, வுஷூ, துப்பாக்கிச் சுடுதல், யோகா, மல்லர்கம்பம், ஸ்கேட் ஸ்கேட்டிங், கயாக்கிங், கேனோயிங் உள்ளிட்ட புதிய விளையாட்டுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மொத்தம் 45 வகையான போட்டிகள் செப்டம்பர் முதல் அக்டோபர் வரை நடத்தப்படவுள்ளன.

இதில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 19 வயதிற்குட்பட்ட மாணவர்கள், கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் மாணவர்கள், 15 முதல் 35 வயதுடைய பொதுப்பிரிவினர், அனைத்து வயதுடைய மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்கள் பங்கேற்கலாம்.

மாவட்ட மற்றும் மண்டல அளவிலான தனிநபர் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு முறையே ரூ.3 ஆயிரம், ரூ.2 ஆயிரம், ரூ.1 ஆயிரம் வழங்கப்படும். மாநில அளவிலான தனிநபர் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு ரூ.1 லட்சம், ரூ.75 ஆயிரம், ரூ.50 ஆயிரம் பரிசாக வழங்கப்படும். மாநில அளவிலான குழுப் போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்களுக்கு முறையே தலா ரூ.75 ஆயிரம், ரூ.50 ஆயிரம், ரூ.25 ஆயிரம் வழங்கப்படும்.

பங்கேற்பாளர்கள் தாங்களாகவோ, பள்ளி அல்லது கல்லூரி மூலமாகவோ இணையதளத்தில் பதிவு செய்துகொள்ளலாம். கூடுதல் விவரங்களுக்கு சிவகங்கை மாவட்ட விளையாட்டு அலுவலகத்தை 04575-299293 என்ற எண்ணிலோ, "ஆடுகளம்" தகவல் தொடர்பு மையத்தை வேலை நாட்களில் காலை 10 முதல் மாலை 5 மணி வரை 95140 00777 என்ற எண்ணிலோ தொடர்புகொள்ளலாம்.

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள், பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 4மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4.62 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள்

விருதுநகர், ஆக.11-
விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று (10.08.2026) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், 4 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4.62 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் மருத்துவர் என்.ஓ.சுகபுத்ரா வழங்கினார்.

கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், புதிய குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு, விபத்து நிவாரணம், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிந்தோருக்கான உதவித்திட்டங்கள், விதவை, திருமணம் மற்றும் முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து 641 மனுக்கள் பெறப்பட்டன.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்காக அமைக்கப்பட்டிருந்த சிறப்பு அமருமிடத்திற்கு நேரில் சென்ற மாவட்ட ஆட்சியர், அவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுப் பரிசீலித்தார். மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கவும், முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்களுக்குக் கூடுதல் கவனம் செலுத்தித் தீர்வு காணவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், பணியின்போது உயிரிழந்தவரின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையும் வழங்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 3 பேருக்கு ரூ.4.38 லட்சம் மதிப்பிலான நவீன செயற்கைக் கால்கள், ஒருவருக்கு ரூ.24 ஆயிரம் மதிப்பிலான நான்கு சக்கர நாற்காலி என மொத்தம் ரூ.4.62 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஆனந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பிர்தௌஸ் பாத்திமா, ஆதிதிராவிடர் நல அலுவலர் சாந்தி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் தேவசகாயம், மாவட்ட வழங்கல் அலுவலர் அமர்நாத் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



## 82 வயது முதியவரின் நெகிழ்ச்சி செயல்! ரூ.30 லட்சம் சொத்துகளை கொடி நாள் நிதிக்கு வழங்க உயில்



மதுரை, ஆக.11-
மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணாவை, சந்தித்த திருப்பரங்குன்றம் ஹார்விப்பட்டியை சேர்ந்த 82 வயதான பி.சுப்பையா, கொடி நாள் நிதிக்கு ரூ.10 ஆயிரத்திற்கான காசோலையை வழங்கினார்.

மேலும், தனது வங்கிக் கணக்கில் உள்ள ரூ.30 லட்சம் மற்றும் அதற்குரிய வட்டித்தொகை, வங்கி பாதுகாப்புப் பெட்டகத்தில் உள்ள ரூ.30 லட்சம் மதிப்பிலான பொருட்கள் ஆகியவற்றை கொடி நாள் நிதிக்கு வழங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட உயில் ஆவணத்தையும் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் வழங்கினார்.

தொடர்ந்து, தாம் இறந்த பின்னர் தனது உடலை அரசு மருத்துவமனைக்கு மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பயன்பாட்டிற்காக வழங்க வேண்டும் என்ற தனது விருப்பத்தையும் தெரிவித்தார்.

82 வயதிலும் நாட்டிற்காக சேவையாற்றிய வீரர்களின் நலனுக்காக தனது சொத்துகளை வழங்க முன்வந்த சுப்பையாவின் மனிதநேய செயல் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.



■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.பொதுமக்களிடமிருந்து இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல், குடும்பஅட்டை, வேலைவாய்ப்பு, முதியோர், விபத்து நிவாரணம், உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டது.

## மதுரை ஆவினில் 2 கால்நடை டாக்டர் பணியிடங்கள்!

மதுரை, ஆக.11-
மதுரை ஆவினில் காலியாக உள்ள 2 கால்நடை மருத்துவ ஆலோசகர் பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதற்கான நேர்முகத் தேர்வு வருகிற 20ந் தேதி காலை 11 மணிக்கு சாத்தமங்கலத்தில் உள்ள மதுரை ஆவின் அலுவலகத்தில் நடைபெறுகிறது. தகுதியான கால்நடை மருத்துவ பட்டதாரிகள் உரிய சான்றிதழ்களுடன் பங்கேற்கலாம்.மேலும் விவரங்களுக்கு 9443708209 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி கோட்டார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மேல்நிலைப்பள்ளியில் மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் பிரதாப் தலைமையில் நடந்தது



கன்னியாகுமரி, ஆக.11-
கன்னியாகுமரி மாவட்டம் கோட்டார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளி மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கி, தெரிவிக்கையில்

வளரும் குழந்தைகளுக்கு குடற்புழுக்கள் இருந்தால் உடல் வளர்ச்சி குறைபாடு, இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படும். வளரிளம் பெண்களுக்கு குடற்புழுக்கள் இருந்தால், அவர்கள் கர்ப்பமாக இருக்கும் காலக்கட்டத்தில் இரத்த சோகை ஏற்பட்டு எடை குறைவான குழந்தைகள் பிறக்க வாய்ப்புள்ளது. மேற்கண்ட குறைபாடுகளை களைவதற்கு வருடத்திற்கு இருமுறை குடற்புழு நீக்க மாத்திரை வழங்குவதுடன் கைகழுவுதல், கழிப்பறைகளை பயன்படுத்துதல் மற்றும் தன் சுத்தம் பேணுதல் ஆகியவற்றை குழந்தைகளுக்கு கற்றுக்கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு ஏற்படும் இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளை நீக்கலாம்.

அனைத்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு பள்ளிகளில் வைத்தும், கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு கல்லூரியில் வைத்தும், பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்லாத குழந்தைகளுக்கும், 20 வயது முதல் 30 வயது வரை உள்ள பெண்களுக்கும் அங்கன்வாடி மையத்திலும், துணை சுகாதார நிலையத்திலும் அல்பெண்டாசோல் மாத்திரைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இன்று முதல் 1 முதல் 19 வயது வரையிலுள்ள அனைத்து குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர் மற்றும் 20 முதல் 30 வயதிலுள்ள பெண்களுக்கும் (கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தவிர்த்து) குடற்புழு நீக்கம் செய்யும் பொருட்டு அல்பெண்டாசோல் மாத்திரை வழங்கப்பட்டுள்ளது. மாணவ மாணவியர்கள் மதிய உணவிற்குப் பின் அல்பெண்டாசோல் மாத்திரைகள் உட்கொண்டதை ஆசிரியர்கள் உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த மாத்திரையை மென்று கடித்து சுவைத்து சாப்பிடவேண்டும். நமது மாவட்டத்தில் 5,20,246 1 வயது முதல் 19 வயது வரை உள்ள குழந்தைகளும், 20 முதல் 30 வயது வரை உள்ள பெண்கள் 73,595 (கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தவிர்த்து), பயனடைவார்கள்.

எனவே மாணவ, மாணவிகள் தங்களது உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அனைவரும் இந்த மாத்திரையை உட்கொண்டு, குடற்புழுத் தொற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையில் குடற்புழு தொற்றை குறைத்து வளமான எதிர்காலத்திற்கு வித்திடுவோம் என்பதை வலியுறுத்தி, தேசிய குடற்புழு நீக்க உறுதிமொழியினை அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் (பொ) ம.மேரி பிரின்சி லதா. நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் .ஆர்.ஐஸ்வர்யா. மாவட்ட சுகாதார அலுவலர் மரு.நமச்சிவாயம், மாநகராட்சி உறுப்பினர் மீனாதேவ், மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.சரோஜா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் .கௌரி. தலைமையாசிரியர் கவிதா, மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.






Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161